நலம், நலமறிய ஆவல்.

# டாக்டர் விகடன்

வழங்கும்

ஆரோக்கியப் பக்கம்

# இரட்டைக் குழந்தை... ஒரே ஒரு ரத்தக்குழாய்!

## ஆபத்தை நீக்கும் புதிய சிகிச்சை

கர்ப்பத்தில் இரட்டைக் குழந்தைகள் வளரும் போது நிறைய சிக்கல்கள் தோன்றுவது வழக்கம் தான். அதில் முக்கியமான ஒன்று, இரண்டு குழந் தைகளுக்கும் ஒரே நஞ்சு இருப்பது. அந்த நஞ்சு வழியாகச் செல்லும் ரத்தக் குழாய்கள் இரண்டு குழந்தைகளுக்கும் பிரச்னையை உண்டாக்கும். இந்தச் சிக்கலைத் தீர்க்க வந்துவிட்டது, ஃபெட் டோஸ்கோபி சிகிச்சை.

இதுகுறித்து சென்னை மெடிஸ்கேன் நிறுவனத் தின் இயக்குனர் டாக்டர் சுரேஷ் பேசினார். “நஞ்சு, தொப்புள் கொடி, கரு ஆகிய மூன்றும் சேர்ந்த அமைப்பைத்தான் கர்ப்பம் என்கிறோம். நஞ்சில் இருந்துதான் தொப்புள் கொடி வழியாக, குழந்தைக்குத் தேவையான ஆக்சிஜனும் சத்துக்களும் கிடைக்கின்றன. ஒரு கர்ப்பத்தில் இரட்டைக் குழந்தைகள் உருவாகும் போது, இரண்டு குழந்தைகளுக்கும் தனித்தனியாக நஞ்சு இருக்க வேண்டும். அப்படி இருந்தால் பிரச்னை இல்லை. சில சமயங்களில் இரண்டு குழந்தைகளுக்கும் சேர்த்து ஒரே ஒரு நஞ்சு மட்டுமே இருக்கும். இதனால் இரண்டு குழந்தைகளும் ஒரே நஞ்சில் இருந்தே ஊட்டச் சத்தைப் பெறவேண்டிய சூழல் உண்டாகும். இதை, ‘மோனோ கொரானிக் ட்வின்ஸ்’ என்று சொல்வோம். சில சமயங்களில் ஒரு குழந்தைக்கு ஊட்டச்சத்து அதிக மாகவும், மற்றொரு குழந்தைக்கு குறைவாகவும் கிடைக்கும் நிலை இருக்கும்.



டாக்டர் சுரேஷ்

இதில் ஒரு குழந்தைக்கும், மற்றொரு குழந்தைக்கும் ரத்தக் குழாய் மூலம் தொடர்பு இருக்கும். அதாவது, முதல் குழந்தையிடம் இருந்து ரத்தக் குழாய் வழியாக இரண்டாவது குழந்தைக்கு ரத்தம் சென்று, இரண்டாவது குழந்தையின் ரத்தக் குழாய் வழியாக மறுபடியும் முதல் குழந்தைக்கே ரத்தம் செல்லும். எல்லா மோனோகொரானிக் ட்வின்ஸிலும் இந்தச் செயல் நடைபெறும். ஆனால் சில சமயங்களில், முதல் குழந்தையிடம் இருந்து இரண்டாவது குழந்தைக்கு செல்லக்கூடிய ரத்தக் குழாய் மட்டுமே இருக்கும். இரண்டாவது குழந்தையிடம் இருந்து முதல் குழந்தைக்கு வரக்கூடிய ரத்தக் குழாய் இருக்காது.

எனவே, முதல் குழந்தையில் இருந்து இரண் டாவது குழந்தைக்கு ரத்தம் சென்றுகொண்டே இருக்கும். அதிக ரத்தம் காரணமாக இரண்டாவது குழந்தையின் இதயம் வீங்கிவிடும். அந்தக் குழந்தை அதிகமாக சிறுநீர் கழியும். அதனால் குழந்தையைச் சுற்றியுள்ள பனிக்குட நீரின் அளவு அதிகரிக்கும். அதே நேரம் முதல் குழந்தை ரத்தம் தந்துகொண்டே இருப்பதால், அதன் ரத்த அளவு குறையும். அதனால் சிறுநீர் போகா மல் அந்தக் குழந்தையைச் சுற்றியுள்ள பனிக்குட நீர் குறைந்து விடும்.

ஒரு குழந்தையின் பனிக்குட நீர் மட்டும் அதிகமாக இருப்பதால், தாயின் வயிறானது ஐந்து மாதங் களிலேயே எட்டு மாதத்தில் இருப்பது போல் பெரிதாக இருக்கும். இதனால் குறைப் பிரசவம் நிகழ்ந்து, போதிய வளர்ச்சி இல்லாமல் இரண்டு குழந்தைகளுமே இறந்துவிடும் அபாயம் உண்டு. இந்தக் குறைபாட்டை அல்ட்ரா சவுண்ட் சோதனையின் மூலம் அறியலாம். இப்போது இந்தப் பிரச்னையை தீர்க்கும் வகையில், கருவில் இருக்கும் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கும் ஃபெட்டோஸ்கோபி கருவியை இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னையில் அறிமுகப்படுத்தி இருக்கிறோம்.



இந்தக் கருவியானது 15 முதல் 20 செ.மீ. நீளமும், 2 மி.மீ. அகலமும்கொண்டது. இதன் ஒரு முனையில் கேமராவும், லேசர் சிகிச்சை கருவியும் இருக்கும். முதலில் லோக்கல் அனஸ்தீஷியா கொடுத்து தாயின் வயிற்றுப் பகுதியை மரத்துப்போகச் செய்வோம். பின்னர், வயிற்றுப் பகுதியில் ஒரு துளையை ஏற்படுத்தி, அதன் வழியாக ஃபெட்டோஸ்கோபி கருவியைச் செலுத்துவோம். அதில் உள்ள கேமரா மூலம் கர்ப்பத்தில் உள்ள உறுப்புகளை கம்ப்யூட்டர் திரையில் பார்த்து, இரண்டு குழந்தைகளுக்கும் ரத்தப் பரிமாற்றம் நடக்கும் ரத்தக் குழாய் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிப்போம். பின்னர், லேசர் கருவி மூலம் அந்த இடங்களில் கதிர்வீச்சை செலுத்தி, ரத்தக் குழாயின் இணைப்பைத் துண்டித்துவிடுவோம். இப்போது இரண்டு குழந்தைகளுக்கும் இடையே எவ்வித ரத்தக் குழாய் இணைப்பும் இல்லாததால், ரத்தப் பரிமாற்றம் இருக்காது. ஆனால், நஞ்சில் இருந்து தொப்புள்கொடி வழியாக மேற்கொள்ளப்படும் பரிமாற்றம் மட்டும் நடைபெறும். எனவே, இரண்டு குழந்தைகளுக்கும் தேவையான ஊட்டச் சத்து கிடைத்துக்கொண்டே இருக்கும். அதனால் இரண்டு குழந்தைகளும் ஆரோக்கியமாக இருக்கும்.

கரு உருவான இத்தனையாவது மாதத்தில்தான், இந்தப் பிரச்னை ஏற்படும் என்று உறுதியாகக் கூற முடியாது. மூன்று மாதம் தொடங்கி ஆறு மாதம் வரை எப்போது வேண்டுமானாலும் உண்டா கலாம். பாதிக்கப்பட்டவர்கள் இந்த சிகிச்சையை மேற்கொண்டால், 60 சத விகிதம் வரை இரண்டு குழந்தைகளையும் காப்பாற்றும் வாய்ப்பு உண்டு.

சில சமயங்களில் நஞ்சில் கட்டி உருவாகவும் வாய்ப்பு உண்டு. இது குழந்தைக்கு ரத்த ஓட்டத்தைப் பாதித்து பெரும் அபாயத்தை ஏற்படுத்தும். இப்போது இந்தக் கட்டியையும், ஃபெட் டோஸ்கோபி மூலம் துண்டித்து எடுத்து விட முடியும்” என்றார்.

இரட்டைக் குழந்தைகள் இனி நலமாய் வெளிவருவார்கள்!

- சி. காவேரி மாணிக்கம்

www.vikatan.com
www.vikatan.com